செ.வெ.எண்:185 நாள்:17.03.2018

# தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி த்துறை சார்பாக திருநெல்வேலி மண்டலஅளவில் தொழிற் பழகுநர் சேர்கை முகாம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி பா.ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தேசிய தொழிற் பழகுநர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பாக திருநெல்வேலி மண்டல அளவில் தொழிற் பழகுநர் சேர்க்கை முகாம் 17-03-2018 சனிக்கிழமை இன்று பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் பங்கேற்று தேர்வு பெறுவதன் மூலம் உலக அளவில் அங்கீகாரம் பெற்ற தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் அளிக்கப்படும். ஐ.டி.ஐ. படிப்பு மட்டும் முடித்து தேசிய தொழிற் சான்றிதழ் பெற்றவரை விட தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் பெற்றவர்கள் கூடுதல் முழுத் திறமை பெற்றவராக அறியப்படுவார்கள்.இச்சான்றிதழ் பெற்றவருக்கு அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படும்.

முகாமில் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் முன்னணி தனியார் தொழிற் நிறுவனங்கள என 60 முன்னணி தொழில் நிறுவனங்கள் கலந்துகொண்டு தங்களுக்கு தேவையான தொழிற்பழகுனர்களை தேர்வு செய்தனர். இம்முகாமில் 2500 மாணவர்கள் (ஐ.டி.ஐ படித்தவர்கள் மற்றும் பொதுக்கல்வித்தகுதி பெற்றோரும்) கலந்து கொண்டனர். இதில் 500 மாணவர்கள் தொழிற்பழகுனர்களாக தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மாதம் ரூ 7000/- முதல் ரூ 12000/- வரை தொழிற் பழகுனர் ஊக்க தொகை வழங்கிடும் வகையில நியமன ஆணையினை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் திருமதி.பா.ஜோதிநிர்மலாசாமி.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இந்த முகாமில் திரு.ராஜகுமார் மண்டல பயிற்சி இணை இயக்குநர் அவர்கள் மற்றும் திரு.வேல்முருகன் துணை இயக்குநர்,அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் பேட்டை, திரு.பரமசிவம் உதவி இயக்குநர் அரசினர் தொடர் அறிவுரை மையம், பேட்டை மற்றும் மண்டலத்தில் உள்ள அனைத்து தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களும் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி